**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**
**DEPOSITION OF WITNESS**
**SC.No.11/2024 – PW-6**

| | |
|---|---|
| Name | திரு.ரமணிகரண் |
| Husband/Father Name | லோகநாதன் |
| Village /Area | சென்னை |
| Taluk | சென்னை |
| Occupation | லாரி மெக்கானிக் |
| Age | 51 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 15.07.2025.

**(எதிரி 1 ஆஜர். எதிரி 2 முதல் 4 வரை கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 08.04.2010 அன்று என்னுடைய லாரி ஷெட்டில் தர்மராஜ் என்பவர் 10 சக்கர கண்டெய்னர் லாரியை (TN 01 X 1533) பழுது பார்த்து சென்றார். நான் அவருடன் நன்கு பழகி வந்ததால் அன்று என்னுடன் வாகனத்தை பழுது பார்த்த போது தர்ம ராஜ் என்பவர் கையில் கருப்பு பிளாஸ்டிக் வளையமும், கரும்பு மணியும் அணிந்திருந்ததை நான் பார்த்தேன். அதன் பிறகு தர்மராஜ் லோடு எடுத்து சென்ற வாகனத்தை காணவில்லை என ராஜா என்பவர் சொல்ல நான் கேள்விப்பட்டேன். பிறகு தர்மராஜ்ம் அவர் ஏற்றிச்சென்ற இரும்பு உதிரி பாகங்கள் இல்லாமல லாரி மட்டும் நெய்வேலியில் நின்று கொண்டிருந்ததாக லாரியை மட்டும் விட்டுவிட்டு அந்த இரும்பு உதிரி பாகங்களை விற்று விட்டு தர்மராஜ் தலைமறைவாகி விட்டார் என்று அவரை தேடிக்கொண்டிருந்தார்கள். பிறகு 10 நாட்கள் கழித்து ராஜா என்பவர்

காவேரிப்பாக்கம் அருகே கிணற்றில் கை கட்டப்பட்ட நிலையில் பிணம் ஒன்று உள்ளதா தொலைக்காட்சியில் பார்த்தகாக கூறி அங்கு சென்று பார்த்து வரலாம் என்று கூறியதின் பேரில் நானும் மற்ற ஓட்டுநர்களும் மற்றும் தர்மராஜின் தந்தையும் காவேரிப்பாக்கம் காவல் நிலையம் சென்று அங்கு காவல் ஆய்வாளர் இறந்த நபரின் புகைப்படம் மற்றும் அவரது உடை, கருப்பு மணி ஆகியவற்றை காட்டினார் அவற்றை நாங்கள் பார்த்தது இறந்த நபர் தர்மராஜ் தான் என்று அடையாளம் காட்டினோம். பிறகு போலீசார் எங்களுடைய லாரி பழுது பார்க்கும் ஷெட்டிற்கு வந்து எதிரியை அடையளம் கண்டிருந்பதாகவும் எங்களை சாட்சியாக இருக்குமாறு கேட்டுக்கொண்டதன் பேரில் நாங்களும் உடன் சென்றோம். எங்களை சென்னை பெரம்பூர் அழைத்து சென்றார். அங்கு காளிமுத்து என்ற எதிரியை கைதுசெய்து அவர் எங்கள் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் எழுதி அதில் சாட்சியாக கையொப்பம் இட்டோம். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் அது அதசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிறகு சென்னை Ennore சென்று அங்கு ஆஜர் எதிரி ரைட் (எ) விஜய்–யை கைது செய்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவு செய்து அதில் எங்களை சாட்சியாக இருக்க கேட்தன் பேரில் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் அது அதசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர் எதிரியை நான் குறிப்பிட்ட மேற்படி ரைட் (எ) விஜய் என்று அடையாளம் காண்பிக்கும் மாறு கேட்ட போது சாட்சி அவரை பார்த்து பல வருடங்கள் ஆகியதால் நினைவில்லை

என்று கூறினார். அதன் பிறகு Ennore ல் மற்றும் ஒரு எதிரி அரிதாஸ் என்பவரை கைது செய்து அவரிடம் பெற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்றுடைது தான் அது அதசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பிறகு எதிரிகள் இரும்பு உதிரி பாகங்களை திருடி விற்பனை செய்த திண்டிவனம், மயிலம் ரோட்டில் உள்ள இரும்பு கடையில் இருந்து இரும்பு உதிரி பாகங்கள் விற்ற வகையில் கிடைத்த பணம் ரூபாய் 4 இலட்சத்து 10 ஆயிரம் தொகையினை ஆயிரம் ரூபாய் நோட்டுக்களாக கைப்பற்றினர். என்னிடம் காட்டப்படும் ஆயிரம் ரூபாய் நோட்டுகள் உள்ள புகைப்படங்களில் உள்ள தாளை தான் எனது முன்னிலையில் கைப்பற்றினார்கள் அது சா.பொ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் கடையில் விற்கப்படாமல் மீதம் இருந்த 1 டன் இரும்பு உதிரி பாகங்களை எங்கள் முன்னிலையில் போலீசார் கைப்பற்றினார்கள். அதில் நானும் என்னுடன் இருந்த சிவராஜீம் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். சம்பவம் குறித்து காவேரிப்பாக்கம் காவல் ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.**

**ஓம்./—திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**